# <u>Sub Court, Eraniel</u>

O.S. No.56/2023
Date: 09.02.2026.

DW2. - திரு. சாமுவேல் ராஜ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் சத்திய தேவ சபை என்ற கிறிஸ்துவ சபையில் நான் போதகராக இருக்கிறேன். முதல் பிரதிவாதி பிலோமினியாள் எங்களது சபைக்கு ஆராதனைக்கு வருவார். உறுப்பினர் கிடையாது. 2ம் பிரதிவாதி எங்களது சபை உறுப்பினர். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அவ்வாறு விபரங்கள் சொன்னேன். 1ம் பிரதிவாதியின் வீடு பாலப்பள்ளத்தில் உள்ளது. 2ம் பிரதிவாதியின் வீடும் பாலப்பள்ளத்தில் உள்ளது. 2 வீடுகளுக்கும் இடையே சுமார் 700 மீ. தூரம் இருக்கும். 12.04.2023 தேதியில் நடைபெற்றதாக சொல்லப்படும் பரிவர்த்தனைகள் எதிலும் நான் சாட்சியாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான். 2ம் பிரதிவாதியின் வீட்டில் இருந்து, ஷியாம் என்பவரின் வீடு 500 மீ தூரம் இருக்கும். சாவியை கொடுத்த சமயத்தில் பட்டிகை சொத்தின் ரெஜிஸ்ட்ரேஷன் முடிந்துவிட்டது. கிரயத் தொகையை நான் எண்ணி பார்க்கவில்லை. ஷியாம் எங்களது சபையில் உறுப்பினராக இருந்தார். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் கொடுத்த சாவி, 2, 3 சாவிகள் இருக்கும். 1வது பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் ரூ.5,08,291/- ஷியாம் உடைய வீட்டில் வைத்து கொடுத்தது மாலை நேரம். அந்த தொகை மற்றும் சாவியை கொடுக்கும் போது நான் அந்த இடத்தில் இல்லை என்றாலும், பிரதிவாதிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால், அவர்களுக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.